1989 மே 2]

8. அரசினர் தீர்மானம்

விதி 32-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒருமணி நேரம் வினாக்கள்—விடைகள் என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, நாளை (3—5—1989) தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒரு மனதாக நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (3-5-1989) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 3-06 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

113. சேலம் மாவட்டம் சார்ந்த மணிவிழுந்தான் காலனி வசந்தாபுரம் கிராமங்களை தானமாக அளிக்கப்பட்ட கிராமங்களாக அறிவிப்பது ஊரக வளர்ச்சித் துறையின் 11—11—1988 ஆம் நாளிட்ட 699 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு பூதான இயக்கச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 15/1958] 28 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

114. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 7—8—1987 ஆம் நாளிட்ட 902 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்—தொடர்ச்சி

115. ஜெர்மானிய ஐக்கிய குடியரசின் தூதரால் கொள் முதல் செய்யப்பட்ட இனங்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக் களிப்பது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 28—9—1988 ஆம் நாளிட்ட 1287 ஆம் எண் அர சாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1[1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

116. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 10—2—1987 ஆம் நாளிட்ட 1361 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தில் (தமிழ் நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

117. தமிழ்நாடு அரசு பண்ணைகள் கழகத்தின் 1980-81ஆம் ஆண்டிற்கான ஆறாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1?1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

118. தமிழ்நாடு இறைச்சி நிறுவனத்தின் 1986-87 ஆம் ஆண்டிற்கான எட்டாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1951) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

119. சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்க்கான இருபத்தேழாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

120. சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனத்தின் 1985-86 ஆம் ஆண்டிற்கான இருபத்தெட்டாவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

142. கோரிக்கை எண். 10—பால்பண்ணை வளர்ச்சித்துறை மற்றும் பால் வழங்கும் திட்டங்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1989-90 (தமிழ், ஆங்கிலம்).

143. கோரிக்கை எண். 21—மீனளத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1989-90 (தமிழ், ஆங்கிலம்).

144. கோரிக்கை எண். 22—கால்நடை பராமரிப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1989-90 (தமிழ், ஆங்கிலம்).